**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்**

| | |
|---|---|
| அ.வ.எண். 6 / 2020 | பி.வா.சா. 1 |
| பெயர் : கருப்பையா என்ற பெரியசாமி | த/பெ. சின்னச்சாமி |
| தாலுகா : நத்தம் | கிராமம் : ஒத்தினிபட்டி |
| தேதி : 15.11.2024 | வயது : 37/2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்
சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 2.19 P.M to 3.02 P.M.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

2) வாதி ராமசாமியின் அப்பா பெயர் வெள்ளைச்சாத்தான் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியும். 1ம் பிரதிவாதி பஞ்சு அம்மாள் என் தாயார். 2ம் பிரதிவாதி சின்னச்சாமி அம்பலம் என் தகப்பனார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்வழக்குரை என் தகப்பனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விபரங்களும், அதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்தும் எனக்கு தெரியும். பி.வா.சா.ஆ.13 மற்றும் பி.வா.சா.ஆ.14 ஆகிய இரு ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தை பூசாரி அழகன் மகன் பூ.ராமசாமி மற்றும் பூ.ராமசாமியின் மகன் ஆர்.ராமசாமி ஆகியோர்களும், வாதி ராமசாமியும் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

3) என் தாயார் பஞ்சு அம்மாளுக்கோ, என் தந்தை சின்னச்சாமி அம்பலத்திற்கோ இந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ல் மேற்கு எனக்குறிப்பிட்டு அதில் எந்த விபரமும் காணப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ல், 1 முதல் 4 சாட்சிகள் கையொப்பம் மட்டும் இடப்பட்டு, தந்தை பெயர், விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் கையொப்பத்திற்கு கீழே 5 முதல் 9 எண்கள் இடப்பட்டு அதில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

4) பி.வா.சா.ஆ.13 ல் கைரேகை இடப்பட்டு, அது யாருடைய கைரேகை என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ல் வாதிக்கு ரூ.12,000/- மதிப்புள்ள மேல்புறமாக உள்ள 4 செண்ட் புஞ்சை நிலத்தை கிரையம் கொடுப்பதாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 5 ல் வாதிக்கு வீடுகட்ட தென்மேற்கு பகுதியில் 5 செண்ட் இடத்தை பூசாரி அழகன் மகன் ராமசாமி அனுமதித்ததாக இப்பிரதிவாதிகள் அறியவருகிறார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) அதேபோல், என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 6 மற்றும் 7 ல் 5 செண்ட் இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 ல் என் அம்மா பஞ்சு அம்மாள் என்பவருக்கு வாதி ராமசாமி எழுதிக்கொடுத்த கிரைய சொத்திற்குரிய பட்டா பாத்திய விடுதலை பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை எழுதி வாங்கியவர் என் அம்மா என்றால் சரிதான், அதில் என் அம்மாவின் கைரேகை உள்ளது. மேற்படி ஆவணத்தில் உள்ள அந்த கைரேகை என் அம்மாவினுடையதல்ல என்றும், வாதி ராமசாமியின் கைரேகை என்றும் சொன்னால் சரியல்ல.

6) அந்த கைரேகை யார் வைத்தது என்ற விபரம் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். 09.02.2009 ம் தேதி என் அம்மா ராஜாங்கம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான், அந்த ஆவணத்தை நான் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என் அம்மா பஞ்சு என கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 15.09.2003 ம் தேதி பி.வா.சா.ஆ.11 ஆவணத்தை என் அம்மா, வைரவன் என்பவருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதிலுள்ள பஞ்சு என்ற கையொப்பம் என் அம்மாவினுடையது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த ஆவண விபரங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன்.

7) வா.சா.ஆ.1ல் வெள்ளைச்சாத்தான் மகன் ராமசாமி என்றும், பட்டா எண்.1684 என்றும், 1393ம் பசலிக்கான சிட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.74/40, விஸ்தீரணம் 19.5 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1393ம் பசலி என்பது 1984ம் வருடத்தை குறிக்கக்கூடியது என்றால் சரிதான். 1984ம் வருடம் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, வெள்ளைச்சாத்தான் மகன் ராமசாமி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அடங்கல் வெள்ளைச்சாத்தான் மகன் ராமசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

8) வாதி ராமசாமியின் பெயரில் கிஸ்தி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். வழக்குச் சொத்திலுள்ள வீட்டிற்கு வீட்டுவரி மற்றும் மின்கட்டண ரசீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 1984ம் ஆண்டிற்கு பின்னர் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்து பூசாரி அழகன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் எந்த ஆவணமும தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) வாதி ராமசாமி பெயரிலுள்ள பட்டாவை இரத்து செய்ய தாலுகா அலுவலகத்தில் மனு செய்தோமா என்றால் இல்லை. வாதி ராமசாமி பெயருடன் என் அம்மா பெயரையும் சேர்த்து கூட்டுப்பட்டா கொடுத்தது தவறுதலாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. 5 செண்ட் கொடுத்ததால் தான் கூட்டுப்பட்டா ஏற்பட்டது. அந்த 5 செண்ட் நிலத்திற்கு தனிப்பட்டாவும், மீதமுள்ள 43 செண்ட்டிற்கு என் அம்மா பெயரில் தனிப்பட்டாவும் வேண்டும் எனக்கோரி மனு செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்குச் சொத்து வாதியின் தந்தை வெள்ளைச்சாத்தான்

என்பவருக்கு வாய்க்கராலாக பாகம் கிடைத்து, அதற்கு பின்னர் அது இந்த வாதிக்கு கிடைத்தது என்றால் சரிதான்.

10) பூசாரி அழகன் வாரிசுகளிடமிருந்து, நானும், என் தாயாரும் எழுதி வாங்கிய கிரைய பத்திரங்கள் சரியான உரிமையாளர்களிடமிருந்து எழுதிப்பெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் என் தாயார் பெயருக்கோ, என் பெயருக்கோ தனிப்பட்டா கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் வாதி ராமசாமிக்கு காரைவீடு உள்ளது, வீட்டுவரி செலுத்தியுள்ளார், அதில் மின் இணைப்பும் உள்ளது என்றால் சரிதான். வாதி ராமசாமியின் சொத்தை இடையூறு செய்ய பிரதிவாதிகளாகிய எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் எனக்கும், என் அம்மா மற்றும் அப்பாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ய முடியாது என்றால் சரியல்ல.

11) என் தாயார் எழுதி வாங்கிய பத்திரம் செல்லாது என்றும், அதனால் தான் அவர் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கும் பாத்தியமில்லாத நபர்களிடம் கிரையம் வாங்கிய விபரம் தெரிந்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, பின்னிட்டு சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. எனவே, வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 15.11.2024 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,
Digitally signed by M.Nallakannan., B.Com., B.L., Date: 2024.11.12 17:07:34 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்